# 5 படைப்பின் பல்வேறு தன்மை



படம் 5.1 - தோட்டம்

இப்பாடலை இராகத்தோடு பாடவும்.

நல்லதொரு செய்தியினை நான் உனக்குச்
சொல்லுகின்றேன் இயேசு என்னை அன்பு செய்கிறார்
நலமுடனே வாழ்வதற்கு காரணத்தைச் சொல்லுகிறேன்
இயேசு என்னைத் தேடி வருகிறார்

வாழ்வில் நிறைவு கண்டதற்கு காரணத்தைச்
சொல்லுகின்றேன் இயேசு என்னை அன்பு செய்கிறார்
வாழ்வை மாற்றிக் கொண்டதற்கு காரணத்தைச்
சொல்லுகிறேன் இயேசு என்னைத் தேடி வருகிறார்

நம்பிக்கையில் வாழ்வதற்கு காரணத்தைச்
சொல்லுகின்றேன் இயேசு என்னை அன்பு செய்கிறார்
நன்மை பல செய்வதற்கு காரணத்தைச்
சொல்லுகிறேன் இயேசு என்னைத் தேடி வருகிறார்

சூரியனே சந்திரனே சொல்லுவதைக் கேளுங்களேன்
இயேசு என்னை அன்பு செய்கிறார்
வெண்ணிலவே விண்மீனே சொல்லுவதைக்
கேளுங்களேன் இயேசு என்னைத் தேடி வருகிறார்

ஊர்ந்து செல்லும் உயிரினமே சொல்லுவதைக்
கேளுங்களேன் இயேசு என்னை அன்பு செய்கிறார்
பறந்து செல்லும் பறவைகளே சொல்லுவதைக்
கேளுங்களேன் இயேசு என்னைத் தேடி வருகிறார்



படம் 5.2 - ஆதாம், ஏவாள்

கடவுள் ஆதாம், ஏவாளுக்கு என்ன கூறினார் எனப் பார்ப்போம்.

கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, ''பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்; அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்; கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்'' என்றார். அப்பொழுது கடவுள், ''மண்ணுலகெங்கும் உள்ள விதை தரும் செடிகள், பழ மரங்கள், அனைத்தையும் உங்களுக்கு நான் கொடுத்துள்ளேன்; இவை உங்களுக்கு உணவாகட்டும்''.

ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்.

(தொ.நூ 1 :28 - 29, 2 :15)

கடவுள் மனிதனில் கொண்டுள்ள அன்பினால் அவர் மனிதனிடம் ஒப்படைத்த சில கடமைகளை திருவிவிலியப் பகுதி முன்வைக்கின்றது. அவையாவன,

1. பிள்ளைப் பேறு.
2. மண்ணுலகில் பலுகிப் பெருகுதல்.
3. மீன்கள், பறவைகள், விலங்குகள் அனைத்தையும் ஆற்றலுக்கு உட்படுத்துதல் அல்லது அவற்றைப் பாதுகாத்து, விருத்தி செய்து, மனித தேவைகளுக்காக உபயோகித்தல்.
4. நிலத்தில் பயிர் செய்தல்.
5. விளைச்சலைப் பாவனைக்கு எடுத்தல்.

கடவுள் படைப்பினை விருத்திசெய்து அதில் நற்பயனைப் பெற இவ்வுலகை மனிதனிடம் ஒப்படைத்துள்ளார். இது எமது கடமையாகும். கடவுளின் படைப்பைப் பாதுகாத்தல் மனிதனுக்குரிய கடமையாகும். எனினும் இன்று மனிதன் படைப்பைப் பாதுகாக்க இயலாதவனாக இருக்கின்றான்.

உதாரணம் :- சூழலை அசுத்தப்படுத்தல், காடுகளை அழித்தல், பொலித்தீன் பாவனை, குப்பைகளை முறையாக அகற்றாமை, காற்றை அசுத்தப்படுத்தல், நீரை மாசுப்படுத்தல்.

வளங்களைப் பாதுகாத்தலும் விருத்திசெய்தலும் முக்கியமாகும். எனவே இறைவனின் படைப்பைப் பாதுகாப்பதற்குத் தேவையானவற்றை மேற்கொள்ள ஊக்கத்துடன் செயற்படுவோம். பல்வேறு தன்மை கொண்ட படைப்பை எமக்குத் தந்துள்ள கடவுளுக்கு நன்றியும் புகழ்ச்சியும் கூறுவோம்.

**செயற்பாடு**

(1) வினாக்களுக்கு விடை அளிக்கவும்.

1. கடவுள் மனிதனுக்குக் கூறிய இரண்டு விடயங்களை எழுதுக.
2. கடவுள் ஆதாமையும் ஏவாளையும் குடியிருக்கச் செய்த தோட்டத்தின் பெயரை எழுதுக.
3. இறை படைப்பின் வழியாக மனிதன் பெறும் பயன்கள் மூன்று எழுதுக.

4. எம்மால் பாதுகாக்கப்பட வேண்டிய படைப்புகள் ஐந்து எழுதுக.
5. பாடலின் வழியாக நீங்கள் கற்றுக் கொள்ளும் படிப்பினைகளை எழுதுக.

(2) உங்கள் வீட்டையும் பாடசாலையையும் சுத்தமாக வைத்திருக்கச் செய்யக் கூடிய ஐந்து விடயங்களை எழுதுக.

(3) சூழலை அழகாக வைத்திருக்க உங்களால் செய்யக்கூடிய ஐந்து விடயங்களை எழுதுக.

## ஒப்படை

- சுவர்ப் பத்திரிகை ஒன்றைத் தயாரிப்பதற்காக பின்வரும் தலைப்புக்களுக்கேற்ப, கடிதம் / சித்திரம் / சித்திரக்கதை/ கவிதை / தாளலயப் பாடல் / மாதிரிப் பகுதிகள் /கட்டுரை செபம் ஆகியவற்றை ஆக்குங்கள்.

1. கடவுளின் படைப்பினால் மனிதன் பெறும் பயன்கள்.
2. கடவுளின் படைப்பை விருத்திசெய்யக்கூடிய விதம்.
3. கடவுளின் படைப்பைப் பாதுகாக்கக்கூடிய விதம்.
4. கடவுளின் படைப்புக்கு நன்றி கூறும் செபம்.



**வாழ்க்கைக்கு.........**

★ குப்பைகளை உரிய இடத்தில் கொட்டுவோம்

★ பொலித்தீன் பாவனையை இயன்றளவு குறைப்போம்.

★ நீரைச் சிக்கனமாக உபயோகிப்போம்.

★ பயனுள்ள செடிகளை வீட்டுத் தோட்டத்தில் நடுவோம்.

★ படைப்பை கொடையாக எமக்குத் தந்த இறைவனை எப்பொழுதும் நன்றி கூறிப் புகழ்வோம்.